

கல்விக்கண் திறந்த கர்மவீரர் காமராஜர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, முன்னாள் அமைச்சர் தங்கம் தென்னரசு நேற்று விருதுநகர் மாவட்டம் திருச்சுழியில் அமைந்துள்ள அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வில் ஒன்றியக் கழகச் செயலாளர்கள், கழக நிர்வாகிகள், கழகத் தோழர்கள் மற்றும் ஏராளமான பொதுமக்கள் பங்கேற்றனர்.

# நாகர்கோவிலில் மாற்றுத்திறனாளி இளைஞர் மர்ம மரணம்!

## காவல் மரணமா? கடும் நடவடிக்கை தேவை! கனிமொழி கருணாநிதி எம்.பி. வலியுறுத்தல்!



சென்னை, ஜூலை 16-

மாற்றுத்திறனாளி சபரிவர்மன் மரணம் குறித்து கனிமொழி கருணாநிதி எம்.பி. ட்விட்டர் பதிவு வருமாறு:-

நாகர்கோவிலில் மாற்றுத்திறனாளி இளைஞர் சபரிவர்மன் என்பவரைக் கைது செய்து நீதிமன்றக் காவலில் வைத்திருந்த நிலையில், நேற்றைய தினம் அவர் உயிரிழந்த செய்தி அதிர்ச்சியும் வேதனையும் அளிக்கிறது.

காவல்துறையினரின் வன்முறைக்கு உள்ளாகி, உடல்நலம் பாதிக்கப்பட்டுதான் அந்த இளைஞர் உயிரிழந்திருப்பதாக அவரது உறவினர்கள் கூறுவது, இது காவல் மரணமா என்ற சந்தேகத்தை எழுப்புகிறது.

இம்மரணத்திற்குப் பொறுப்பேற்று, இதில் தொடர்புடைய காவலர்கள் மீது நடவடிக்கை எடுக்குமா த.வெ.க. அரசு?

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. தெரிவித்துள்ளார்.

### டிப்ளோமேட் பாஸ்போர்ட் இல்லாமல் — சொந்த பாஸ்போர்ட்டில்

# வெளிநாடு சென்ற அமைச்சர்கள் கீர்த்தனா, ராஜ்மோகன்!

## மிகப்பெரிய விதிமீறல்! கொதித்தெழுந்த ஒன்றிய அரசு!

சென்னை, ஜூலை 26-

**தமிழக அரசுக்கு விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்பியுள்ளது ஒன்றிய அரசு. தமிழ்நாடு அரசின் தொழில் துறை அமைச்சர் செல்வி கீர்த்தனா மற்றும் பள்ளிக் கல்வித்துறை, தமிழ் வளர்ச்சி, செய்தித் துறை அமைச்சர் ராஜ்மோகன் ஆகிய இருவரும் சமீபத்தில் அரசு பயணமாக வெளிநாடு சென்று திரும்பியுள்ளனர்.**

**இதில் மிகப்பெரிய விதிமீறல் செய்யப்பட்டு உள்ளதாக புகார் வைக்கப்பட்டு உள்ளது.**

தமிழக அரசியல் வட்டாரத்தில் தற்போது ஹாட் டாப்பிக்காக மாறியிருப்பது, தமிழக அமைச்சர்களின் வெளிநாட்டுப் பயணம் மற்றும் அதற்கு ஒன்றிய அரசு அனுப்பியுள்ள ஷோ காஸ் நோட்டீஸ் விவகாரம் தான்.

விதிமுறைகளை மீறி வெளிநாடு சென்று திரும்பிய அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளால், தமிழக அரசு இப்போது டெல்லிக்கு பதில் சொல்ல வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்பட்டுள்ளது. கோட்டை வட்டாரத்தையே உலுக்கிக்கொண்டிருக்கும் இந்த விவகாரத்தின் பின்னணி என்ன? விரிவாகப் பார்ப்போம்.

**சர்ச்சையை கிளப்பிய வெளிநாட்டுப் பயணம்!**

தமிழக அரசின் தொழில் துறை அமைச்சர் செல்வி கீர்த்தனா மற்றும் பள்ளி கல்வித் துறை, தமிழ் வளர்ச்சி, செய்தித் துறை அமைச்சர் ராஜ்மோகன் ஆகிய இருவரும் சமீபத்தில் அரசுப் பயணமாக வெளிநாடுகளுக்குச் சென்று திரும்பியுள்ளனர். இவர்களுடன் துறை சார்ந்த ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் மற்றும் அமைச்சர்களின் தனி உதவியாளர்களும் பெரும் பட்டாளமாக உடன் சென்றுள்ளனர்.

அரசு முறைப் பயணம், முதலீடுகளை ஈர்ப்பதற்கான பயணம் எனப் பல காரணங்கள் சொல்லப்பட்டாலும், இந்த ஒட்டுமொத்தப் பயணமும் இப்போது ஒரு மிகப்பெரிய சட்ட சிக்கலில் வந்து முடிந்துள்ளது.

**விதிமீறல் என்ன? டெல்லி காட்டிய சிவப்புக்கொடி!**

பொதுவாக, ஒரு மாநிலத்தின் அமைச்சர்களோ அல்லது உயர் அதிகாரிகளோ அரசு முறைப் பயணமாக வெளிநாடுகளுக்குச் செல்லும்போது, அதற்கு ஒன்றிய வெளியுறவுத் துறை மற்றும் உள்துறை அமைச்சகத்தின் முறையான அனுமதியைப் பெற வேண்டும் என்பது கட்டாய விதியாகும்.

மேலும், இத்தகைய பயணங்களின் போது அவர்கள் Diplomatic Passport மூலமாகவே பயணிக்க வேண்டும்.

ஆனால், இந்த விவகாரத்தில் அமைச்சர் கீர்த்தனா மற்றும் அமைச்சர் ராஜ்மோகன் ஆகிய இருவருமே ஒன்றிய அரசின் எவ்வித முன் அனுமதியும் பெறவில்லை எனக் கூறப்படுகிறது. அதுமட்டுமன்றி, டிப்ளமேடிக் பாஸ்போர்ட்டைப் பயன்படுத்தாமல், தங்களுடைய சொந்த பாஸ்போர்ட் மூலமாக வெளிநாடு சென்று வந்துள்ளனர்.

இது அப்பட்டமான விதிமுறை மீறல் என்றும், நாட்டின் விதிமுறைகளுக்கு எதிரானது என்றும் டெல்லி தரப்பு கொதித்தெழுந்துள்ளது.

**மத்திய உள்துறை அமைச்சகத்தின் 'ஷோ காஸ்' நோட்டீஸ்!**

இந்த விதிமீறலைக் கடுமையான குற்றச்சாட்டாகக் கையில் எடுத்துள்ள மத்திய உள்துறை அமைச்சகம், தற்போது தமிழக அரசுக்கு விளக்கம் கேட்டு அதிரடியாக 'ஷோ காஸ்' நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

அந்த நோட்டீஸில், மத்திய அரசின் அனுமதி இல்லாமல் அமைச்சர்கள் எப்படி வெளிநாட்டுப் பயணம் மேற்கொள்ளலாம் என்று கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. மேலும், இந்த விவகாரத்தில் தமிழக அரசின் தலைமைச் செயலக அதிகாரிகள் மற்றும் ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் தங்களது கடமையைச் சரியாகச் செய்யவில்லை என்றும், அரசை முறையாக அவர்கள் வழிநடத்தத் தவறிவிட்டனர் என்றும் ஒன்றிய அரசு சுட்டிக்காட்டியுள்ளதாகத் தெரிகிறது.

**அதிகாரிகள் மீது ஒழுங்கு நடவடிக்கை?**

அமைச்சர்களுடன் சென்ற ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் மற்றும் உதவியாளர்களும் மத்திய அரசின் அனுமதியைப் பெறத் தவறியதால், அவர்கள் மீதும் துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என அந்த நோட்டீஸில் வலியுறுத்தப்பட்டுள்ளதாக கோட்டை வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அரசியல்வாதிகளுக்கு விதிகள் தெரியாமல் போனாலும், நிர்வாகத்தை நடத்தும் ஐ.ஏ.எஸ். அதிகாரிகளாவது இதனைச் சுட்டிக் காட்டியிருக்க வேண்டாமா என்ற கேள்வி டெல்லியில் பலமாக எழுந்துள்ளது.

**மண்டையை உடைத்துக் கொள்ளும் அதிகாரிகள்!**

மத்திய உள்துறை அமைச்சகத்திடமிருந்து வந்துள்ள இந்த அதிரடி நோட்டீஸால் தமிழக அரசுக்கு என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் தலைமைச் செயலக உயர் அதிகாரிகள் தற்போது திகைத்துப் போயுள்ளனர்.

# கனிம வள வழக்கில் தொடர்புடைய முதல்வரின் நண்பர் ஜனார்த்தன ரெட்டிக்காக தமிழக ஆற்று மணலை கொள்ளையடிக்க முயற்சிப்பதா?

## முன்னாள் சட்டப் பேரவை தலைவர் மு.அப்பாவு கேள்வி!



*நெல்லை, ஜூலை 16 -*

*கனிம வள வழக்கில் தொடர்புடைய உங்கள் நண்பர் ஜனார்த்தன ரெட்டிக்காக தமிழ்நாட்டின் ஆறுகளில் மணல் எடுக்க உத்தரவிட்டுள்ளீர்களா? கன்னியாகுமரி மாவட்ட கடற்கரை அணு கனிம மணல் எடுக்க ஓராண்டு நீட்டித்து உத்தரவிட்டது போல்,தமிழக ஆற்று மணலையும் கொள்ளையடிக்க முயற்சிப்பதா? என முன்னாள் சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு கேள்வி எழுப்பியுள்ளார்.*

*இது தொடர்பாக முன்னாள் பேரவை தலைவர் மு.அப்பாவு தனது எக்ஸ் வலைதள பதிவில் கூறியிருப்பதாவது.*

*தமிழ்நாட்டின் முக்கிய ஆறுகலான பாலாறு, காவேரி,வைகை,தாமிரபரணி ஆறுகளில் மணல் எடுப்பதால் நிலத்தடி நீர் பாதிக்கப்பட்டு குடிநீர், விவசாயம் போன்ற அடிப்படை தேவைகளுக்கு தண்ணீர் பஞ்சம் ஏற்பட்டு தமிழ்நாடே பாலைவனமாக மாறிவிடும் என்பதால் 2017 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 2 ம் தேதி சென்னை உயர்நீதிமன்றத்தில் ஆற்று மணலுக்கு பதிலாக கட்டுமான பணிகளுக்கு குவாரி மணல் (M sand) பயன்படுத்த வேண்டுமென்றும், தமிழ்நாட்டு ஆறுகளில் முழுமையாக ஆற்று மணல் எடுப்பதற்கு தடை விதிக்க வேண்டுமென்றும் நான் தொடர்ந்து பொதுநல வழக்கை விசாரித்த சென்னை உயர்நீதி மன்ற தலைமை நீதியரசர் அவர்கள் 2017 ஆம் ஆண்டு மார்ச் 20 ஆம் தேதி பிறப்பித்த உத்தரவில் அன்றைய தமிழக தலைமைச் செயலாளர், நீர்வளத்துறை, பொதுப்பணித்துறை மற்றும் சம்மந்தப்பட்ட அரசு செயலாளர்கள் கொள்கை முடிவுவெடுக்க வேண்டும் என்ற உத்தரவின் அடிப்படையில் தொடர்ந்து 2026 வரை ஆட்சியில் இருந்த அரசுகளும், எடுத்த தொடர் நடவடிக்கையின் பயனாக தற்போது ஆற்று மணல் எடுப்பது நிறுத்தப்பட்டுள்ளது.CM sir*

*உங்கள் நண்பர் கனிம வள வழக்கில் தொடர்புடைய ஜனார்த்தன ரெட்டி (Gali Janarthana Retty ) அவர்களுக்காக தமிழ்நாட்டின் ஆறுகளில் மணல் எடுக்க உத்தரவிட்டுள்ளீர்களா? ஏற்கனவே கன்னியாகுமரி மாவட்ட கடற்கரை அணு கனிம மணல் எடுக்க ஓராண்டு நீட்டித்து உத்தரவிட்டது போல்,தமிழக ஆற்று மணலையும் கொள்ளையடிக்க முயற்ச்சிப்பதா? ஏற்கனவே தமிழக விவசாயிகள் வாங்கிய கடனை தள்ளுபடி செய்வதாக அறிவித்து ஏமாற்றியது நினைவிருக்கிறதா? காவிரி தண்ணீரையும் தமிழகத்துக்கு பெற்றுக் கொடுக்க எந்த முயற்சியிலும் ஈடுபடாத தாங்கள் ஆற்று மணலையும் அள்ளி விவசாயிகளை தற்கொலைக்கு தள்ள துணிந்து விட்டீர்களா?*

*இவ்வாறு முன்னாள் பேரவை தலைவர் மு.அப்பாவு தனது எக்ஸ் வலைதள பதிவில் கூறியுள்ளார்.*



தென்காசி மாவட்டம் மலையடிப்பட்டியில் நடைபெற்று வரும் முக்கிய தொல்லியல் அகழாய்வுப் பணிகளை முன்னாள் தொல்லியல் துறை அமைச்சர், திருச்சுழி சட்டமன்ற உறுப்பினர் தங்கம் தென்னரசு நேற்று முன்தினம் (14.07.2026) நேரில் பார்வையிட்டார்.உடன் ஒன்றியச் செயலாளர் லாலா சங்கரபாண்டியன் உட்பட கழகத்தினர் மற்றும் தொல்லியல்துறை ஆய்வாளர் இதில் உள்ளனர்.

# தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளாரின் பிறந்தநாள் விழா!

## முன்னாள் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் வாழ்த்து!

சிவகங்கை, ஜூலை 16-

சிவகங்கை மாவட்டம் குன்றக்குடியில் குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம் உள்ளது. இந்த குன்றக்குடி மடத்தின் 46வது குருமகா சன்னிதான மடாதிபதியாக தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் உள்ளார். இவரது பிறந்த நாள் விழா ஒவ்வொரு ஆண்டும் ஜூலை மாதம் 14ஆம் தேதி மங்கள நாள் விழாவாக கொண்டாடப்பட்டு வருகின்றது நேற்று முன்தினம் அதிகாலையில் குன்றக்குடி பொன்னம்பல அடிகளாரின் பிறந்த நாளை முன்னிட்டு குன்றக்குடி சண்முகநாதர் கோயிலில் சிறப்பு அபிஷேக ஆராதனைகள் பூஜைகள் நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து குன்றக்குடியில் உள்ள மடத்தில் தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் பக்தர்களுக்கு அருள் ஆசி வழங்கினார் . தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளாரை கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் சார்பில் முன்னாள் அமைச்சர் மாவட்டக் கழகச் செயலாளர் கே.ஆர்.பெரியகருப்பன் பொன்னாடை போர்த்தி வாழ்த்து கூறினார். தொடர்ந்து முன்னாள் எம்.எல்.ஏ. ராம அருணகிரி, பொதுக்குழு உறுப்பினர் பள்ளத்தூர் கே.எஸ்.ரவி, கல்லல் மேற்கு ஒன்றிய செயலாளர் குன்னக்குடி சுப்பிரமணியன், ஒன்றிய துணைச் செயலாளர் எஸ். முத்துக்குமார், புதுக்கோட்டை தொழிலதிபர் பிரசன்னா ராஜா இருமதி துரை கருணாநிதி மற்றும் குன்றக்குடி மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்கள் தொழிற்பயிற்சி ஆசிரியர் ஆசிரியர்கள் மாணவ மாணவிகள், பொது மக்கள் எழுத்தாளர் சிங்கார வடிவேலன் பல்வேறு அமைப்புகளின் நிர்வாகிகள் ஆகியோர் ஆசி பெற்றார்கள். தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளாரின் பிறந்தநாளை சிறப்பு அன்னதானம் அனைவருக்கும் வழங்கப்பட்டது.

# தூத்துக்குடியில் பெருந்தலைவர் காமராஜர் பிறந்தநாள்!

## திருவுருவச் சிலைக்கு முன்னாள் அமைச்சர் கீதாஜீவன், மேயர் ஜெகன் பெரியசாமி மாலை அணிவித்து மரியாதை!

தூத்துக்குடி, ஜூலை 16–

தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் காமராஜரின் 124 வது பிறந்தநாளை முன்னிட்டு அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவிக்கும் நிகழ்ச்சிக்கு வடக்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும் முன்னாள் அமைச்சருமான கீதாஜீவன் தலைமையில் மேயர் ஜெகன் பெரியசாமி, மாநகர செயலாளர் ஆனந்தசேகரன் ஆகியோர் முன்னிலையில் மாலை அணிவித்து மரி யாதை செய்து இனிப்பு வழங்கினார்கள்.

நிகழ்ச்சியில் துணை மேயர் ஜெனிட்டா, மாவட்ட அவைத்தலைவர் செல்வராஜ், மாவட்ட துணைச் செயலாளர்கள் ராஜ்மோகன்செல்வின், ஆறுமுகம், மாநில பொறியாளர் அணி துணை அமைப்பாளர் அன்பழகன், மண்டலத் தலைவர் வக்கீல் பாலகுருசுவாமி, பொதுக்குழு உறுப்பினர் கோட்டுராஜா, மாநில பேச்சாளர் இருதயராஜ், மாநகர துணைச்செயலாளர் கீதாமுருகேசன், மாவட்ட அணி நிர்வாகிகள் அந்தோணிஸ்டாலின், கவிதாதேவி, அந்தோணிகண்ணன், அருண்குமார், பழனி, ஜேசையா, அருணாதேவி, நிக்கோலஸ்மணி, பழனி, கல்யாணசுந்தரம், பேச்சிமுத்து, மாவட்ட பிரநிதிகள் சக்திவேல், நாராயணன், செல்வகுமார், சுரேஷ், மாநகர அணி நிர்வாகிகள் ஜீவன்ஜேக்கப், கிறிஸ்டோபர் விஜயராஜ், முருக இசக்கி, சாகுல்ஹமீது, பால்ராஜ், ரவி, சங்கரநாராயணன், சாரதி, நாராயண வடிவு, செய்யது காசிம், சத்யா சக்திவேல், பரமசிவம், வக்கீல்கள் நாகராஜன்பாபு, செல்வலெட்சுமி, ரூபராஜா, நலம்ராஜேந்திரன், ரவி, பகுதி செயலாளர்கள் சுரேஷ்குமார், ராமகிருஷ்ணன், கவுன்சிலர்கள் சரவணக்குமார், விஜயகுமார், ஜெயசீலி, பேபிஏஞ்சலின், பாப்பாத்தி, இசக்கிராஜா, ராஜதுரை, அந்தோணி பிரகாஷ் மார்ஷலின், ரெக்ஸ்லின், ஜான்சிராணி, சந்திரபோஸ், ராஜேந்திரன், கந்தசாமி, வட்டச்செயலாளர்கள் சுப்பையா, பொன்ராஜ், டென்சிங், சிங்கராஜ், செல்வராஜ், சதிஷ்குமார், கதிரேசன், மூக்கையா, சுரேஷ், சுரேஷ் மகாராஜா, பாலகுருசாமி, பொன்னுச்சாமி, செந்தில்குமார், கருப்பசாமி, ரவீந்திரன், முனியசாமி, பாலு, ரவிசந்திரன், வட்டப்பிரதிநிதிகள் பாஸ்கர், புஷ்பராஜ், பகுதி அணி அமைப்பாளர்கள் சூர்யா, காசிராஜன், செல்வம், துணை அமைப்பாளர் சிவசுந்தர், முன்னாள் பெருமாள் கோவில் அறங்காவலர் குழு தலைவர் செந்தில்குமார், மற்றும் மணி, முரளிதரன் சின்னகாளை ராஜன் நாராயணன், கமலி. அல்பட், திராவிடர் கழக மாவட்ட தலைவர் முனியசாமி, காப்பாளர் ராஜேந்திரன், மற்றும் சக்திவேல், போஸ் உள்பட பலர் கலந்து கொண்ட னர்.

காமராஜ் காய்கனி மார்க்கெட்டில் உள்ள சிலைக்கு காய்கனி மார்க்கெட் தலைவர் சி.த.சு.ஞான்ராஜ், மாலை அணிவித்து மரி யாதை செய்து இனிப்பு வழங்கினார். நிகழ்ச்சியில் மேலாளர் நியூட்டன், துணை மேலாளர் ரவி மற்றும் பிச்சமுத்து, முருகன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



தூத்துக்குடியில் பெருந்தலைவர் கர்மவீரர் காமராஜர் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார் முன்னாள் அமைச்சர் அனிதா ஆர். ராதா கிருஷ்ணன். இதில் தூத்துக்குடி மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் பை.மூ.ராமஜெயம், மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் எஸ்.ஆர்.எஸ்.உமரி சங்கர், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் தங்கத்துறை பாண்டியன், ஆசிரிய பெருமக்கள் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.